பதிவு அஞ்சல் மூலம்

APPlicant

## நகர் ஊரமைப்புத் துறை


அனுப்புநர்

க.கோபால கிருஷ்ணன், B.E.,
உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருவள்ளூர் மாவட்டம்,
எண்.43/397A, இரண்டாம் தளம்,
அன்னை இந்திரா காந்தி சாலை,
இராஜாஜிபுரம் பகுதி – II,
திருவள்ளூர் - 602 001.
தொலைபேசி - 044-29595440.
email-tvlrregion@gmail.com


பெறுநர்

ஊராட்சி மன்றத் தலைவர்,
புதுவள்ளூர் ஊராட்சி மன்றம்,
கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
திருவள்ளூர் வட்டம்,
திருவள்ளூர் மாவட்டம்.

**ந.க.எண்.2513/2020/ திருவள்ளூர்-2** நாள்.13.08.2021.

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு - திருவள்ளூர் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலம் - திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், புதுவள்ளூர் ஊராட்சி, நயப்பாக்கம் கிராமம், சர்வே எண்கள்.276/1A, 1B1 மற்றும் பலவற்றில் 8.63 ஏக்கர் பரப்பிற்கு ஏற்கனவே ம.வ/ந.ஊ.உ.இ.(திவம)எண்.182/2017 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டதில் சர்வே எண்கள். 277/6பாகம், 7பாகம் மற்றும் 295/10பாகம்-ல் அமையும் சமுதாயக்கூடத்திற்கு ஒதுக்கப்பட்ட 1839.16 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தினை குடியிருப்பு மனைப்பிரிவாக மாற்றி தொழில் நுட்ப அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை:

1. மனுதாரர், M/s.Casa Grande Realtors LLP அவர்களின் கடித இணையதள விண்ணப்ப எண்.20200640101917l, நாள்.19.11.2020.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின அனுமதி கடிதம் ந.க.எண்.2693/2021/TCP-7/LA, நாள்.19.02.2021.
3. இவ்வலுவலகக் கடிதம், இதே எண், நாள்.29.04.2021.(சாலை, புல்வெளி மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு ஒப்படைக்க கோரியது).
4. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம். ந.க.எண்.19799/2020/போ, நாள்.24.12.2020.
5. மனுதாரர்.M/s.Casa Grande realtors LLP அவர்களின் கடிதம், நாள்.29.06.2021, (தானப்பத்திர எண்.2200/2021, நாள்.28.06.2021 மற்றும் திருத்திய தானப்பத்திரம் எண்.2622/2021, நாள்.26.07.2021)
6. அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.04.06.2004.
7. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020.
8. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(3) நாள்.23.09.2020.
9. அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(1) நாள்.09.12.2020

For CASA GRANDE REALTORS LLP

10. அரசு கடிதம் எண்.10113/நவ4(3)/2017-1 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.30.08.2017.

11. நகர் ஊரமைப்பு ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017.

*****

**உத்தரவு :**

பார்வை 1-ல் கண்டுள்ள மனுதாரர் கடிதத்தின்படி குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், புதுவள்ளூர் ஊராட்சி, நயப்பாக்கம் கிராமம், சர்வே எண்கள் 276/1A, 1B1 மற்றும் பலவற்றில் 8.63 ஏக்கர் பரப்பிற்கு ஏற்கனவே ம.வ/ந.ஊ.உ.இ.(திவம)எண்.182/2017 என எண்ணிட்டு குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டதில் சர்வே எண்கள் 277/6பாகம், 7பாகம் மற்றும் 295/10பாகம்-ல் அமையும் சமுதாயக்கூடத்திற்கு ஒதுக்கப்பட்ட 1839.16 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தினை குடியிருப்பு மனைப்பிரிவாக மாற்றி பார்வை 2-ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் இசைவின்படி பார்வை 3-ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதம் நாள்.29.04.2021 மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது. பார்வை 5-ல் கண்டுள்ள மனுதாரர் கடிதம் மூலம் சாலை, புல்வெளி மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானமாக தானப்பத்திர எண்.2200/2021, நாள்.28.06.2021 மற்றும் திருத்திய தானப்பத்திரம் எண்.2622/2021, நாள்.26.07.2021-ல் ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

2. இம்மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/மா.ந.ஊ.உ.இ.(திருவள்ளூர்)எண்.109/2021 (இது ஏற்கனவே ஒப்பட்ட மனைப்பிரிவு ம.வ/ந.ஊ.இ.(திவம)எண்.182/2017-ல் அமையும் சமுதாயக்கூடத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை மாற்றியமைக்கிறது) என எண்ணிட்டு 4 அசல் வரைபடங்கள் மற்றும் அசல் தானப்பத்திரங்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பிவைக்கப்படுகிறது.

3. மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண் 4-ஆணைப்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட சார்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

5. செயலாணை கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பிவைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**சிறப்பு நிபந்தனைகள்:**

1. பார்வை 9-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 7-ல் கண்ட TNCDBR – 2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் " Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicants directly, only after ensuring that the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by

For CASA GRANDE REALTORS LLP

S.A.K

Authorised Signatory

constructing required OHT, provide necessary street lights etc, as per the standards specified by the Local Body.

2. பார்வை 10 மற்றும் 11-ல் கண்ட அரசு கடித மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்

3. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development Act 2016). The promoter has to advertise, market, book, sell or offer for sale or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. பார்வை 6 மற்றும் 8-ல் காணும் அரசாணைகளின்படி மனைகளுக்கான நன்னிலை வரி ரூ.4,000/-(ரூபாய் நான்காயிரம் மட்டும்) பரிசீலனைக் கட்டணம் ரூ.3,700/-(ரூபாய் மூன்றாயிரத்து எழுநூறு மட்டும்) பெறப்பட்டுள்ளது. மேலும் கொடிநாள் நிதியாக நன்னிலை வரி கட்டணத்தில் 20% தொகை ரூ.2000/- " Armed Force Flag Day Fund" என்ற பெயரில் Demand Draft பெறப்பட்டுள்ளது

**இணைப்பு:**

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்
( 4 தொகுப்பு மற்றும் அசல் தானபத்திர
எண்கள்:2200/2021, நாள்.28.06.2021
மற்றும் 2622/2021, நாள்.26.07.2021)

13/8/2021

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலர்,
திருவள்ளூர் மாவட்டம்.

நகல்:

1. மனுதாரர் ( பத்தி ஒன்று மட்டும்)
M/s.Casa Grande Realtors LLP.,
NPL Devi, 5th Floor, No.111, LB Road.
Thiruvanmiyur, Chennai- 600 041.

2. உதவி இயக்குநர், (ஊராட்சி மன்றத் தலைவர், புதுவள்ளூர் ஊராட்சி மன்றம் மூலமாக)
நில அளவை துறை,
திருவள்ளூர் மாவட்டம்.
(சாலை பகுதியினை
உள்ளாட்சியின் பெயரில் வருவாய்
ஆவணங்களில் உட்பிரிவு செய்யும்
பொருட்டு.)

13.8.2021

For CASA GRANDE REALTORS LLP

Authorised Signatory

## கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம்
## புதுவள்ளூர் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின்
## செயல்முறைகள்

முன்னிலை : திருமதி.K.ஈஸ்வரிகுமரேசன்

ஊ.அ.எண்: 02/2020-21

நாள்:19.08.2021

பொருள்: மனைபிரிவு - கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் - புதுவள்ளூர் ஊராட்சி – நயப்பாக்கம் கிராமம் சர்வே எண். 276/1A, 1B1-ல் மற்றும் பலவற்றில் 8.63 ஏக்கர் பரப்பிற்கு ஏற்கனவே நகர் ஊரமைப்பு ஆணையர் (திவம) எண்.182/2017 அவர்களால் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டதில் சர்வே எண்.277/6பாகம், 7பாகம் மற்றும் 295/10பாகம்-ல் அமையும் சமுதாய கூடத்திற்கு ஒதுக்கப்பட்ட 1839.16 ச.மீ பரப்பளவு இடத்தினை குடியிருப்பு மனைப்பிரிவாக மாற்றி வரன்முறைபடுத்தி மனைக்கு அனுமதி அளித்து உத்தரவிடல் சார்ந்து.

பார்வை: ந.க.எண்:2513/2020/ திருவள்ளூர் 2 நாள்: 13.08.2021

**உத்தரவு:**

மனுதார் திரு. Casa Grande Realrors LLP கடித நாள்: 19.11.2020 திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த புதுவள்ளூர் ஊராட்சி நயப்பாக்கம் கிராமம் சர்வே எண். 276/1A, 1B1-ல் மற்றும் பலவற்றில் 8.63 ஏக்கர் பரப்பிற்கு ஏற்கனவே நகர் ஊரமைப்பு ஆணையர் (திவம) எண்.182/2017 அவர்களால் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டதில் சர்வே எண்.277/6பாகம், 7பாகம் மற்றும் 295/10பாகம்-ல் அமையும் சமுதாய கூடத்திற்கு ஒதுக்கப்பட்ட 1839.16 ச.மீ பரப்பளவு இடத்தினை அரசு விதிகளின்படி வரன்முறைபடுத்தும் வகையில் ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய உரிய தொகையை உள்ளாட்சி நிதி தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே சமுதாய கூடத்திற்கு ஒதுக்கப்பட்ட 1839.16 ச.மீ பரப்பளவு இடத்தினை குடியிருப்பு மனைப்பிரிவாக மாற்றி அனுமதி அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

தலைவர்
புதுவள்ளூர் ஊராட்சி
கடம்பத்தூர் ஒன்றியம்

தலைவர்
புதுவள்ளூர் ஊராட்சி
கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
திருவள்ளூர் தாலுகா & மாவட்டம்.

பெறுநர்:

திரு. Casa Grande Realrors LLP,
NPL Devi, 5th Floor, No.111, LB Road,
Thiruvanmiyur,
Chennai-600 041.

For CASA GRANDE REALTORS LLP

Authorised Signatory